பேரறிஞர் அண்ணா நினைவு நாளை யொட்டி ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் முன்பு வைக்கப்பட்ட திருஉருவப் படத்திற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கழகத் தோழர்களுடன் இணைந்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து, தூய்மைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு காலை உணவை வழங்கினார். அருகில் மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணளான், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் "தமிழ்நாடு தலை குனியாது மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று சென்னை, பெரம்பூர், மங்களபுரம், சந்தியோகி சமாதி சாலையில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே சேகர் பாபு முன்னிலையில் தலைமை செயற்குழு உறுப்பினர் – மேயர் பிரியா ராஜன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுக்கூட்டத்தில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்ஏ, தலைமை கழக பேச்சாளர் கவிஞர் இந்திரஜித், கழக இளம் பேச்சாளர் செல்வி ரூ.கீர்த்தனா ஆகியோர் உரையாற்றினர். இதில் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., என்.கிருஷ்ணமூர்த்தி, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, பெரம்பூர்.ஆர்.ராஜன், புனிதவதி எத்திராசன் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, லயன் பி.உதயசங்கர், தில்லை கதிரவன், புல்லட் கி.ரமேஷ், பி.புவனவதி, கினார் ஆறுமுகம், பரிமளா சுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, ஏம்.ஏ.டீக்கா, எம்.இசட்.அபோய், மு.சரவணன் எம்.சி, ரமணி லோகேஷ் எம்.சி, தமிழ்ச்செல்வி சசிகுமார் எம்.சி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும் முதல்வருக்கு

விழுப்புரம் மாவட்டக் கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

விழுப்புரம், பிப்.4-

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சிப்காட் மருந்தியல் பூங்கா அருகில் நடைபெறும் அரசு விழாவில் 10,000 பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்க வருகை தரும் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கூறுகையில் கழகத் தலைவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (4.2.2026-புதன்கிழமை) காலை 10 மணிக்கு திண்டிவனம் அடுத்த சிப்காட் மருந்தியல் பூங்கா அருகில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்று உங்களுடன் ஸ்டாலின் திட்டம் பத்தாயிரம் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காணப்பட்ட பயனாளி களுக்கு நலத் திட்ட உதவிகளையும் சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட்ட

முதியோர் ஓய்வூதிய திட்டத்தினை தொடங்கி வைத்து பத்தாயிரம் பயனாளிகளுக்கு பல் வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு வருகை தரும்கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விழுப் புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப் பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டி வனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், தி.மு.க. மூத்த நிர்வா கிகள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின்

முன்னாள் இணை இயக்குனர் இரா.பரதன் மறைவு!

கழகத்தினர் – அரசு அலுவலர்கள் அஞ்சலி!

செங்கோட்டை, பிப், 4-

செய்தி மக்கள் தொடர்பு துறையின் முன்னாள் இணை இயக்குனர் இரா.பரதன் அவர்கள் 2.2.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவர் திராவிட இயக்கத்தின் மீது அளவற்ற ஈடுபாடு மிக்கவர். இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் மாணவர் அணியில் தன்னை இணைத்து, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திராவிட கொள்கை சித்தாந்தத்தை பறைசாற்றியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடத்தில் மிகுந்த பாசமும், ஈடுபாடும் கொண்டவர்.

இவர் 1970ஆம் ஆண்டு செய்தித் துறையில் மக்கள் தொடர்பு அலுவலராக பணியில் சேர்ந்து 2006 ஆம் ஆண்டில் பணி ஓய்வு பெற்றார். இவர் பணியாற்றிய அலுவலகங்களில் பணியாளர்களிடத்தில் மிகுந்த அக்கறையும் பாசமும் கொண்டவர்.மேலும், மிகச்சிறந்த பேச்சாளர். தனது கணீர்குரலில் அரசு நிகழ்ச்சிகளில் அனைவரது கவனத்தை தனது பேச்சாள் ஈர்த்தவர்.

இவரின் பணிக்காலத்தில் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும், பண்பாளராகவும், துறையின் ஜாம்பவானாகவும் திகழ்ந்தவர். இவரது மறைவு செய்தித் துறையினரி டையே மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

இவர் பணிக்காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம், அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் மிகுந்த நன்மதிப்பை பெற்றவர். மேலும், தனது அரசு பணி காலத்தில் சிறந்த எழுத்து திறமையாலும், ஒப்பற்ற நிர்வாக திறனுடனும், அரசின் முக்கிய திட்டங்கள் சாதனைகளை சிறப்பாக செயல்படுத்தியவர். கன்னியாகுமரியில் அமையப்பெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை, வள்ளுவர் கோட்டம், உலகத் தமிழ் மாநாடு மற்றும் பல முக்கிய நிகழ்வுகளில் சிறப்பாக பணியாற்றி கலைஞர் இடத்தில் பாராட்டுகளைப் பெற்றவர்.

இவர் உடல்நலக்குறைவால் தென்காசி மாவட்டம் செங்கோட்டையிலுள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்தினார்.

அன்னாரது மறைவுச் செய்தியறிந்து செய்தித் துறை அலுவலர்களும் கழகத் தினரும் அன்னாரது இல்லம் சென்று மறைந்த பரதன் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பேரறிஞர் அண்ணா நினைவு நாள்: திருக்கோயில்களில் பொது விருந்து!

அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று சிறப்பித்தனர்!

சென்னை, பிப்.4-

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் நேற்று (03.02.2026) நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுடன் உணவருந்தினர். பின்னர் ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகளையும் வழங்கினர்.

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகக் கட்டுப் பாட்டிலுள்ள திருக்கோயில்களில் ஆண்டுதோறும் சுதந்திர தினம் மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய தினங்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப் பட்டு வருகிறது. அதன்படி, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நேற்று (03.02.2026) அடையாறு, அனந்தபத்ம நாப சுவாமி திருக்கோயிலில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருவான்மியூர், மருந்தீசுவரர் திருக்கோயிலில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளச்சேரி, தண்டீஸ்வரர் திருக்கோயிலில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, காளிகாம்பாள் உடனுறை கமடேஸ்வரர் திருக்கோயிலில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மயிலாப்பூர், அருள்மிகு முண்டகண்ணியம்மன் திருக்கோயிலில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மாங்காடு, காமாட்சி அம்மன் திருக்கோயிலில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்களுடன் உணவு அருந்திய பின்னர், ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகளை வழங்கினர்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர் ஆகியோர் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகளை வழங்கினர்.

வில்லிவாக்கம், சௌமிய தாமோதரப்பெருமாள் திருக்கோயிலில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக் கோயிலில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், மயிலாப்பூர், மாதவப் பெருமாள் திருக்கோயிலில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், பூங்கா நகர், கந்தசாமி (எ) முத்துக்குமார சுவாமி திருக்கோயிலில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தேவராஜ முதலி தெரு, சென்னமல்லீஸ்வரர் மற்றும் சென்னகேசவப் பெருமாள் திருக்கோயிலில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், பள்ளியப்பன் தெரு, அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் பேரவை துணைத்தலைவர் கு. பிச்சாண்டி, சிந்தாதிரிப்பேட்டை, ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் அரசு தலைமை கொறடா க.இராமச்சந்திரன் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு ஆகியோரும், கே.கே.நகர், சக்தி விநாயகர் திருக்கோயிலில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் எ.எம்.வி. பிரபாகர் ராஜா, திருவொற்றியூர், தியாகராஜசுவாமி திருக்கோயிலில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம் மற்றும் கே.பி.சங்கர், பாடி., திருவல்லீஸ்வரர் திருக்கோயிலில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், பெசன்ட் நகர், மகாலட்சுமி திருக்கோயிலில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எம்.எச்.ஹசன் மௌலானா, சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் மற்றும் திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு ஆவடி காமராஜர் நகரில் அருகில் அமைந்துள்ள திருவுருவ சிலைக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஆவடி தொகுதி திருவேற்காட்டில் அமைந்துள்ள கருமாரியம்மன் திருக்கோவிலில் அண்ணா நினைவு நாள் சிறப்பு வழிபாடு பொது சமபந்தி விருந்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார் உடன் நகர்மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி, பகுதி செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், கழக நிர்வாகிகள் அறங்காவல குழு உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

சென்னை மண்டல மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன் தலைமையில் நடைபெற்றது. மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப. ராணி, மகளிர் தொண்டர் அணி இணை செயலாளர் தமிழரசி ரவிக்குமார், எம்.எல்.ஏ., திருவள்ளூர் மாவட்ட பொறுப்பாளர் சேலம் சுஜாதா, பிரச்சாரக் குழு செயலாளர் ராணி ரவிச்சந்திரன் சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஷ், காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் யாழினி, மகளிர் அணி ஆலோசனை குழு உறுப்பினர் வாசுகி ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார் நன்றி கூறினார்.

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

விழுப்புரம் தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் - ர. சதீஷ் 38, கிருஷ்ணசாமி தெரு, வி.கே.எஸ். நகர், விராட்டிக்குப்பம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஏ. அசோக்குமார் 50/96, செவலை ரோடு, திருக்கோவிலூர் - 605757, விழுப்புரம் மாவட்டம். 2) சே. ஞானதேவா 3/48, மாரியம்மன் கோவில் தெரு, சிறுமதுரை மற்றும் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) அ. ரவிக்குமார் 1/152, வாசுகி இல்லம், வாரியார் தெரு, கண்டாச்சிபுரம், விழுப்புரம் மாவட்டம். 4) ரா. தட்சணாமூர்த்தி 18, ரெட்டிக்குப்பம் ரோடு, புதிய ஆதிதிராவிர் குடியிருப்பு, விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம். 5) செ. பார்த்தசாரதி 13, இராகவேந்திரா நகர், 2வது தெரு, வண்டிமேடு, விழுப்புரம் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-02-2026.

தயாநிதி மாறன் எம்.பி.
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

தி.மு.க. இலக்கிய அணி

இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

இராமநாதபுரம் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்களாக **மு.பா. இளஞ்செழியன்** (71/2, திருவள்ளுவர் தெரு, கேணிக்கரை, இராமநாதபுரம்.), **ம. சரவணன்** (1/27, எம்.எஸ்.கே. நகர், இராமநாதபுரம்) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-02-2026.

வி.பி.கலைராஜன்
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (04.02.2026 - புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் நுங்கம்பாக்கம், எண்.20/32, காம்தார் நகர் முதல் தெருவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1) கழக ஆக்கப் பணிகள்

நே.சிற்றரசு
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் பவானி அம்மன் திருக்கோயிலில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு சமபந்தி விருந்து மற்றும் கும்மிடிப்பூண்டி பக்தர்களுக்கு சேலை வழங்கும் நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் பங்கேற்றார். உடன் ஜெ.மூர்த்தி, மு.மணிபாலன், ஏ.வி.ராமமூர்த்தி, எஸ்.ரமேஷ், ஜான்(எ)பொன்னுசாமி, இரா.அறிவழகன், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தின் முன் நடந்த அஞ்சலி நிகழ்ச்சியில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, கழகத் தோழர்களுடன் இணைந்து கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களைக் கடைப்பிடிக்கும் உறுதி மொழியை ஏற்றார்.